(அ.வ.எண்.06/2026)

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆண்டிபட்டி**

**முன்னிலை: திரு. E. சுகந்தன், B.A., L..L..M.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆண்டிபட்டி**

**2026–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 21–ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**அசல் வழக்கு எண்.06/2026**

**CNR.No.TNTH140000082026**

P.முருகன் ... **வாதி**

**// எதிர் //**

1. சி.திருமாலிங்கம்
2. சி. கதிர்வேல் ... **பிரதிவாதிகள்**

இவ்வழக்கானது கடந்த 10.08.2026 ஆம் தேதி என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.காத்தன் அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் படி மெமோ கட்டாததால், 1ம் பிரதிவாதி தரப்பில் தள்ளுபடி செய்தும், 2ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.B.அய்யப்பன் அவர்கள் ஆஜராகியும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் தோன்றா தரப்பினராக்கப்பட்டும், வாதிதரப்பு சாட்சி விசாரிக்கப்பட்டு மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, வாதிதரப்பு கேட்கப்பட்டு, இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த நிலையில் இன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும்.....

**தீர்ப்புரை**

தாவா நிலத்திற்கு செல்லக்கூடிய கிழமேல் 99.6 மீட்டர் மற்றும் தென்வடல் 20 அடி அகல பொதுபாதையினை பிரதிவாதிகளோ அவர்களது வகையாட்களோ ஆக்கிரமித்து முள்வேலி அமைத்து மூட யாதொரு முயற்சியும் மேற்கொள்ளக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும்,

வழக்கின் செலவுத் தொகை கோரியும், இதர பரிகாரங்கள் கோரியும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. பிராது சுருக்கம் பின்வருமாறு:**

2.1. தாவா சொத்தானது வாதியின் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் அவரது கைவசம் வைத்து அனுபவித்து வந்து, அவர் இறந்த பின்பு அவரது மகனான வாதியின் பெயரில் பட்டா மற்றும் கிஸ்தி ஏற்பட்டு அனுபவித்து வருகின்ற நிலமாகும். 1ம் பிரதிவாதி வெளியூரில் உள்ளதால் அவருக்கு பாத்தியப்பட்ட ச.எண்.449/4A மற்றும் அரசு தரிசு அனாதீன நிலங்களை 2ம் பிரதிவாதி மேற்பார்த்து வருகிறார் என்றும், தாவா இடம் ச.எண்.449/4B மற்றும் ச.எண்.449/4A நிலங்களுக்கு மேற்கே வேலப்பர் கோவில் மெயின் ரோட்டினை ஒட்டி அரசு தரிசு அனாதினம் நிலமான ச.எண்.449/2ல் கண்ட அரசு அனாதின நிலத்தின் வடபுறம் மெயின் ரோட்டிலிருந்து கிழ்புரம் கிழமேல் 99.6 மீட்டர் நிலமும், தென்வடல் 20 அடி அகலமும் கொண்ட பொதுபாதையானது கடந்த 50 வருட காலமாக வாதி மற்றும் பிரதிவாதிகள் பொதுபாதையாக அனுபவித்து வருகின்றார்கள். மேற்படி பாதையில் கண்ட இடத்தில் வாதி இரண்டு போஸ்ட் கம்பங்கள் (மின் கம்பங்கள்) ஊன்றி மின் இணைப்பு அவரது தாயார் பெயரில் பெற்றும் அனுபவித்து வருகிறார் என்றும், மேற்படி பொதுபாதையின் வழியே வாதி மற்றும் பிரதிவாதிகள் அனுபவித்து வருகின்ற நிலையில், 1ம் பிரதிவாதி அரசு தரிசினை ஒட்டி 60 செண்டினை கிரையம் பெறுகிறார். அவர் கிரையம் பெற்ற இடத்தின் வழியே மெயின் சாலைக்கு சென்றுவருகின்ற காரணத்தால், அரசு தரிசில் வாதியின் நிலத்திற்கு செல்லும் பொதுபாதையை கல் ஊன்றி முள்வேலி அமைக்க பிரதிவாதிகள் சட்ட விதிமுறைகளுக்கு மீறி செயல்பட்டு வருகிறார்கள்.

2.2. பிரதிவாதிகள், பொதுபாதையினை முள்வேலி போட்டு அடைக்கும் நோக்கில் கடந்த 03.01.2026ம் அடியாட்களுடன் வந்து முயற்சி மேற்கொண்டார்கள். வாதி சில பெரியோர்களின் துணைகொண்டு அவர்களின் அத்துமீறல்களை தடுத்து நிறுத்திவிட்டார். வாதிக்கு மேற்படி பாதையினை தவிர அவரது நிலத்திற்கு செல்ல வேறு வழி ஏதும் இல்லாததால், பிரதிவாதிகள் எப்படியும், பொதுபாதையை அடைத்துவிடுவோம் என வர்மித்து சென்றுள்ளார்கள். பிரதிவாதிகள் ஆள்பலமும், பணபலமும் மிக்கவர்கள் என்றால் மேற்படி பாதையினை முள் வேலி கொண்டு அடைத்துவிட முயற்சி மேற்கொள்வார்கள் என்பதால், மேற்படி பொது பாதையினை பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ முள்வேலி அமைத்து பொதுபாதையை அடைத்துவிட முயற்சி மேற்கொள்ளக்கூடாது என்பதற்கு பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை உத்தரவு வாதிக்கு ஆதரவாக பிறப்பிக்கப்பட வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. 1ம் பிரதிவாதிக்கு படி மெமோ கட்டாததால் அவரைப் பொறுத்து இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டும், 2ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் இன்மையாலும் தோன்றா தரப்பினராக ஆக்கப்பட்டுள்ளனர்.

4. வாதி தரப்பில், வாதி முருகன் வா.சா.1–ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில், வா.சா.1–ஐ பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வராத நிலையில், 2ம் பிரதிவாதி அழைத்தும் ஆஜரியின்மையால் பிரதிவாதி

தோன்றா தரப்பினராக்கப்பட்டும், பிரதிவாதிகள் தரப்பில் யாதொரு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் முன்னிருத்தப்படவில்லை. வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**5. தீர்வு - 1.**

5.1. கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில், தாவா சொத்தானது கடந்த 50 வருட காலமாக பொதுபாதையாக வாதிகள் மற்றும் பிரதிவாதிகளும் அனுபவித்து வந்த சொத்து என்றும், மேற்படி மெயின் சாலையில் இருந்து வாதியின் நிலத்திற்கு செல்ல வேறுவழி இல்லாத நிலையில், 1 ம் பிரதிவாதி வடபுறத்தில் 60 செண்டு கிரையம் பெற்ற நாளிலிருந்து, மேற்படி நிலத்தின் வழியே பாதை புழக்கத்தினை வைத்துக்கொண்டு, பொதுபாதையினை அடைக்க 03.01.2026 ல் முயற்சி மேற்கொண்டார்கள் என்றும், பிரதிவாதிகளின் அத்துமீறல்கள் மற்றும் அடாவடி முயற்சிகளை தடுத்து நிறுத்தி விட்டனர் என்றும் எனவே, தாவா சொத்தில் பிரதிவாதிகளோ அவரது வகையாட்களோ, ஏஜெண்ட்களோ தாவா நிலத்திற்குள் நுழைந்து அத்துமீறி இடைஞ்சல் ஏதும் செய்யக்கூடாது என நிலையுறுத்துக் கட்டளைப் பரிகாரம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

5.2. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்யும்போது வாதி தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்கள் வா.சா.ஆ.1 கடந்த 09.01.2026 கடந்த தேதியிட்ட கணினி பட்டா ஆகும். தாவா சொத்தானது வாதியின் தகப்பானர் பெயரில் ஏற்பட்டு அவரது இறப்பிற்கு பின் வாதி பெயரில் ஏற்பட்டதாக உள்ளது. வா.சா.ஆ.2 கடந்த 07.02.2015 ம் தேதியிட்ட மற்றும் வா.சா.ஆ.3 கடந்த 23.02.2018 ம் தேதியிட்ட கிஸ்தி இரசீதுகள் ஆகும், வா.சா.ஆ 2 மற்றும் வா.சா.ஆ.3–ஐ ஆராய்கையில் வாதி பெயரில் ஏற்பட்ட கிஸ்தி இரசீதுகள் ஆகம்.

வா.சா.ஆ.4 கடந்த 06.11.2025 தேதியும் மற்றும் வா.சா.ஆ.5 கடந்த 08.09.2025 தேதியிட்ட மின் இணைப்பு கட்டண இரசீதுகள் ஆகும், வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5–ஐ ஆராய்கையில் அது வாதியின் தாயார் பெயரில் ஏற்பட்ட மின் இணைப்பு கட்டண இரசீதுகள் ஆகும். மேலும், வா.சா.ஆ.6 அடங்கல் ஆகும். வா.சா.ஆ.6 ஆனது சர்வே எண்.449–ற்கான அடங்கல் ஆகும். மேலும் வா.சா.ஆ.7–ஐ கடந்த 09.01.2026 ம் தேதியிட்ட பட்டா ஆகும், , வா.சா.ஆ.7–ஐ ஆராய்கையில் 1ம் பிரதிவாதிக்கு 449/5A க்கான பட்டா ஆகும். வா.சா.ஆ.8–ஐ ஆராய்கையில் 09.01.2026 ம் தேதியிட்ட புலவரைபடம் ஆகும். வழக்கு ஆவணங்களான வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8–ன் மூலம் வழக்கு வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

7. பிரதிவாதிகள் இவ்வழக்கில் தோன்றாத்தரப்பினர்களாக இருப்பதால் வா.சா.1 சாட்சியங்கள் மறுக்கப்படாமலும், மறுதளிக்கப்படாமலும், இருக்கிறது. எனவே, இவ்வழக்கில் பிரதிவாதிகளுக்கு எதிராக எதிர் அனுமானத்திற்கு வருவதற்கே உதவிகரமாக உள்ளது. மேலும், வா.சா.1 சாட்சியம் ஏற்கும்படியாகவும், நம்பும்படியாகவும் உள்ள நிலையில் வாதியின் தாவா வழக்கானது சாட்சியங்கள் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையான சான்றாவணங்களின் வாயிலாக பிரதிவாதிக்கு எதிராக நிரூபணம் செய்யப்பட்டதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆக தாவா வழக்கில் வாதி, பிரதிவாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றே இப்பிரச்சினைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**இறுதியாக, இவ்வழக்கு அனுமதிக்கப்பட்டு,**

**1) வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்திற்கு செல்லக்கூடிய கிழமேல் 99.6 மீட்டர் மற்றும் தென்வடல் 20 அடி அகல பொதுபாதையினை 1ம் பிரதிவாதியோ அவரது வகையாட்களோ, ஏஜெண்ட்களோ அத்துமீறி நுழைந்து இடைஞ்சல்**

**ஏதும் செய்யக்கூடாது என நிலையுறுத்துக் கட்டளைப் பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.**

**2) 1ம் பிரதிவாதிக்கு எதிராக, இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.**

**3) வழக்கின் செலவுத் தொகையை வாதிக்கு 2ம் பிரதிவாதி வழங்க உத்தரவிடப்படுகிறது.**

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் ஒலி வடிவில் எடுக்கப்பட்டு, பின்னர் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21–ஆம் நாள் வெள்ளிக்கிழமை இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2026.08.21 17:08:26 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆண்டிபட்டி.**

**வாதி தரப்பு சாட்சிகள்:**

வா.சா.1 – முருகன்

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:**

| **வரிசை எண்.** | **தேதி** | **ஆவணம்** | **தன்மை** |
|---|---|---|---|
| **வா.சா.ஆ.1.** | 09.01.2026 | பட்டா | நகல் |
| **வா.சா.ஆ.2.** | 07.02.2015 | கிஸ்தி இரசீது | அசல் |
| **வா.சா.ஆ.3.** | 23.02.2018 | கிஸ்தி இரசீது | அசல் |
| **வா.சா.ஆ.4.** | 06.11.2025 | மின் இணைப்பு இரசீது | அசல் |
| **வா.சா.ஆ.5.** | 08.09.2025 | மின் இணைப்பு இரசீது | அசல் |
| **வா.சா.ஆ.6.** | – | அடங்கல் | நகல் |
| **வா.சா.ஆ.7.** | 09.01.2026 | 1ம் பிரதிவாதி பெயரிலுள்ள சிட்டா | நகல் |

(அ.வ.எண்.06/2026)

| | | | |
|---|---|---|---|
| **வா.சா.ஆ.8.** | 09.01.2026 | புலவரைபடம் | அசல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி :</u> இல்லை**

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:</u> இல்லை**

**<u>நீதிமன்றம் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>** இல்லை.

E SUGANTHAN
Digitally signed by E SUGANTHAN
Date: 2026.08.21 17:08:31 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆண்டிபட்டி.**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**ஆண்டிபட்டி,**
**OS. No.06/2026**
**Judgment**
**Fair/Draft**
**Dated: 21.08.2026.**